www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

**12**ஆம் வகுப்பு.

# அரசு பொதுத்தேர்வு மார்ச் - 2025

PART - III

பதிவு எண்

கால அளவு : 3.00 மணி நேரம் ] **வணிகவியல் (விடைகளுடன்)** [மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள்:**

(1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **[20 × 1 = 20]**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. நிதிச் சந்தை, வணிக நிறுவனங்களுக்கு ________ உதவுகிறது.
   (அ) விற்பனையை அதிகரிப்பதற்கு
   (ஆ) நிதிகளை திரட்டுவதற்கு
   (இ) நிதித் தேவையை குறைப்பதற்கு
   (ஈ) பணியாட்களை தேர்வு செய்வதற்கு

2. பணச்சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு ________.
   (அ) பாரத ஸ்டேட் வங்கி (ஆ) வணிக வங்கி
   (இ) மைய வங்கி (ஈ) இந்திய ரிசர்வ் வங்கி

3. கூட்டு முதலீட்டு திட்டங்களின் செயல்பாட்டை பதிவு செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ________ எனப்படுகிறது.
   (அ) மறுபுறத்தோற்றமற்ற பத்திரங்கள்
   (ஆ) பரஸ்பர நிதிகள்
   (இ) புறத்தோற்றமற்ற பத்திரங்கள்
   (ஈ) பட்டியல்

4. மாவட்ட மன்றத்தின் தலைவர் யார்?
   (அ) உயர் நீதிமன்ற நீதிபதி
   (ஆ) உச்ச நீதிமன்ற நீதிபதி
   (இ) மாவட்ட நீதிபதி
   (ஈ) மேலே குறிப்பிட்ட எவரும் இல்லை

5. மேலாண்மை என்பது ஒரு ________.
   (அ) கலை மற்றும் அறிவியல்
   (ஆ) கலை
   (இ) கலை அல்லது அறிவியல்
   (ஈ) அறிவியல்

6. நம்பிக்கையற்ற ஊக வணிகர்கள் என்பவர் :
   (அ) காளை (ஆ) மான்
   (இ) முட வாத்து (ஈ) கரடி

7. விளம்பரம் என்பது ஒரு ________ ஆட்சேர்ப்பு வளமாகும்.
   (அ) முகவர் (ஆ) அக வளங்கள்
   (இ) புறத்திறனீட்டல் (ஈ) புற வளங்கள்

8. குறியிலக்கு மேலாண்மையானது ________ என்பவரால் அமெரிக்காவில் பிரபலபடுத்தப்பட்டது.
   (அ) ஹென்றி பயோல் (ஆ) பேராசிரியர் ரெட்டின்
   (இ) எப்.டபிள்யூ.டெய்லர் (ஈ) ஜார்ஜ் ஓடியோர்ன்

9. செபியின் தலைமையகம் ________ ஆகும்.
   (அ) சென்னை (ஆ) கல்கத்தா
   (இ) தில்லி (ஈ) மும்பை

10. நுகர்வோர் இயக்கத்தின் தந்தை யார்?
    (அ) ரால்ப் நாடர் (ஆ) மகாத்மா காந்தி
    (இ) ஜவஹர்லால் நேரு (ஈ) ஜான்.எப்.கென்னடி

11. தேசியத் திறன் அபிவிருத்தி குறிக்கோள் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு :
    (அ) ஜுலை 2015 (ஆ) ஜுன் 2000
    (இ) மே 2010 (ஈ) ஆகஸ்டு 2008

12. வணிகத்தொழில் முனைவோரைச் சாராத பணியைக் கண்டறிக.
    (அ) வாங்கல் (ஆ) விற்பனை
    (இ) தயாரிப்பு (ஈ) கழிவு

13. ஜி.எஸ்.டி. என்பது ________.
    (அ) சரக்கு மற்றும் விற்பனை வரி
    (ஆ) சரக்கு மற்றும் சமூக வரி
    (இ) சரக்கு மற்றும் ஊதிய வரி
    (ஈ) சரக்கு மற்றும் சேவை வரி

14. பணி வழியற்ற பயிற்சி எங்கு அளிக்கப்படுகிறது?
    (அ) தொழிற்சாலைக்கு வெளியே
    (ஆ) வகுப்பறையில்
    (இ) விளையாட்டு மைதானத்தில்
    (ஈ) வேலையில்லா நாட்களில்

15. இணையத்திற்கு நுழைவு வாயில் என்பது ________.
    (அ) மோடம் (ஆ) போர்டல்
    (இ) வெபினார் (ஈ) சிபியு

16. மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது எது?
    (அ) திட்டமிடுதல் (ஆ) புதுமைப்படுத்துதல்
    (இ) முடிவெடுத்தல் (ஈ) கட்டுப்படுத்துதல்

17. திட்டமிடல் என்பது ________ செயல்பாடு ஆகும்.
    (அ) தேர்ந்தெடுக்கப்பட்ட
    (ஆ) பரவலான / ஊடுருவலான
    (இ) (அ) மற்றும் (ஆ) இரண்டும்
    (ஈ) மேலே உள்ள எதுவும் இல்லை



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



18. வணிக மாற்றுச்சீட்டுகளை வாங்குவதற்கும் விற்பதற்குமான சந்தையை ________ என்று அழைக்கலாம்.
(அ) வணிக இரசீது சந்தை (ஆ) வணிகத்தாள் சந்தை
(இ) மூலதனச் சந்தை
(ஈ) கருவூல இரசீது சந்தை

19. NSEI தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு :
(அ) 1998 (ஆ) 1990 (இ) 1997 (ஈ) 1992

20. சந்தையில் உயர்நிலையில் இருப்பவர் யார்?
(அ) மொத்த விற்பனையாளர்
(ஆ) வாடிக்கையாளர்
(இ) சில்லறை விற்பனையாளர்
(ஈ) விற்பனையாளர்

## பகுதி - II

**குறிப்பு :** **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30-க்கு கட்டாயமாக** விடையளிக்கவும்.
**7 × 2 = 14**

21. செயலூக்கமளித்தல் என்றால் என்ன?
22. OTCEI பற்றி சிறு குறிப்பு வரைக.
23. துணைத் தரகர் என்றால் என்ன?
24. மனித வள மேலாண்மை என்றால் என்ன?
25. தரப்படுத்துதல் என்றால் என்ன?
26. கலப்படம் பற்றி சிறு குறிப்பு எழுதுக.
27. மாவட்ட மன்றம் பற்றி சுருக்கமாக விளக்குக.
28. வருநிகழ்வுசார் சரக்கு என்றால் என்ன?
29. வாக்கெடுப்பு என்றால் என்ன?
30. நீ ஒரு தொழில் முனைவராக இருந்தால், மூலதனத்தை எவ்வாறு திரட்டுவாய்?

## பகுதி - III

**குறிப்பு :** **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40-க்கு கட்டாயமாக** விடையளிக்கவும்.
**7 × 3 = 21**

31. டெய்லரின் 'மேலாண்மைத் தத்துவங்கள்' யாவை?
32. வணிக இரசீதின் வகைகளை விவரிக்கவும். (ஏதேனும் 3)
33. பங்கு சந்தையின் குறைபாடுகள் ஏதேனும் மூன்றை விவரி.
34. சாதாரண தீர்மானம் தேவைப்படும், ஏதேனும் மூன்று செயல்பாடுகளை தருக.
35. சந்தையிடுகையாளரின் ஏதேனும் மூன்று பங்களிப்பை குறிப்பிடுக.
36. தேசிய ஆணையத்தின் உறுப்பினர்கள் யாவர்?
37. தாராளமயமாக்கல் என்றால் என்ன?
38. மாற்றுமுறை ஆவணத்தின் ஏதேனும் மூன்று அனுமானங்களை எழுதுக.
39. மந்தமான தொழில் முனைவோர் என்பவர் யார்?
40. பணியமர்த்தலின் முக்கியத்துவம் பற்றி ஏதேனும் மூன்றினை பட்டியலிடுக.

## பகுதி - IV

**குறிப்பு :** **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
**7 × 5 = 35**

41. அ) நவீன மேலாண்மையின் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் ஐந்து) **(அல்லது)**
ஆ) நுகர்வோர் நீதிமன்றத்தில் புகார் அளிப்பதில் உள்ள படிநிலைகள் யாவை? (ஏதேனும் ஐந்து)

42. அ) தாராளமயமாக்கலின் நன்மைகள் மற்றும் குறைபாடுகள் பற்றி விளக்குக. (ஏதேனும் ஐந்து)
**(அல்லது)**
ஆ) பணச்சந்தையின் சிறப்பியல்புகள் ஏதேனும் ஐந்தை விளக்குக.

43. அ) மனித வளத்தின் சிறப்பியல்புகளை விளக்குக. (ஏதேனும் ஐந்து) **(அல்லது)**
ஆ) நிர்வாகத்தில் முக்கிய நிர்வாக அதிகாரிகள் (KMP) என்பவர் யார்?

44. அ) சந்தையிடுகையின் பரிணாம வளர்ச்சி பற்றி விவரி. (ஏதேனும் ஐந்து) **(அல்லது)**
ஆ) செல்தகு மேலெழுத்தின் அடிப்படைக் கூறுகளைக் கூறுக. (ஏதேனும் ஐந்து)

45. அ) பல்வேறு வகையான நிதிச் சந்தைகளை விவரி. (ஏதேனும் ஐந்து) **(அல்லது)**
ஆ) பல்வேறு வகையான சோதனைகளை விவரி. (ஏதேனும் ஐந்து)

46. அ) அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தினை விளக்குக. (ஏதேனும் ஐந்து)
**(அல்லது)**
ஆ) விதி விலக்கு மேலாண்மையின் நன்மைகள் யாவை? (ஏதேனும் ஐந்து)

47. அ) குறிப்பு வரைக :
(i) தேசிய பங்குச் சந்தை (NSE)
(ii) தேசியபத்திரவைப்பகங்கள்வரையறுக்கப்பட்டது. (NSDL) **(அல்லது)**
ஆ) தொழில் முனைவின் முக்கியத்துவத்தை விவரி. (ஏதேனும் ஐந்து)

# விடைகள்

## பகுதி - I

1. (ஆ) நிதிகளை திரட்டுவதற்கு
2. (ஆ) வணிக வங்கி
3. (ஆ) பரஸ்பர நிதிகள்
4. (இ) மாவட்ட நீதிபதி
5. (அ) கலை மற்றும் அறிவியல்
6. (ஈ) கரடி
7. (ஈ) புற வளங்கள்
8. (ஈ) ஜார்ஜ் ஓடியோர்ன்
9. (ஈ) மும்பை
10. (அ) ரால்ப் நாடர்
11. (அ) ஜுலை 2015
12. (இ) தயாரிப்பு
13. (ஈ) சரக்கு மற்றும் சேவை வரி
14. (அ) தொழிற்சாலைக்கு வெளியே
15. (அ) மோடம்
16. (அ) திட்டமிடுதல்
17. (ஆ) பரவலான / ஊடுருவலான
18. (அ) வணிக இரசீது சந்தை
19. (ஈ) 1992
20. (ஆ) வாடிக்கையாளர்

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



## பகுதி - II

21. (i) ஒரு பணியை விரைவாக செய்து முடிப்பதையும், பணியாளர்களின் பணியின் மீதான விருப்பத்தை வளர்ப்பதையும் செயலூக்கமளித்தல் என்ற சொல் உள்ளடக்கியுள்ளது.
(ii) செயலூக்கமளித்தல் ஒரு வளமிக்க தலைமையின் கீழ் செய்யப்பட வேண்டும்.

22. பங்குகளை இந்தியா முழுவதும் மின்னணு மூலம் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு முதன்மை நிதி நிறுவனங்களால் உருவாக்கப்பட்டதே OTCEI என்பதாகும். இதன் மூலம் முதலீட்டாளர் மற்றும் நிறுமத்திற்கு சில பிரச்சனைகள் இருந்த போதும் வெளிப்படைத் தன்மை, விரைவான முடிவு, நெகிழ்வு தன்மை ஆகிய நன்மைகளையும் அளிக்கிறது.

23. துணைத் தரகர் பங்கு மாற்றகத்தின் உறுப்பினரின் முகவராகக் செயல்படுவார். தன்னை அமர்த்திய முதல்வருக்கு அதாவது உறுப்பினருக்கு வியாபாரத்தைப் பெற்று தந்து அதற்காகக் கழிவு பெறுவார்.

24. (i) மனித வளத்தை நிர்வகிக்கும் மேலாண்மையின் கிளையே மனித வள மேலாண்மை என அழைக்கப்படுகிறது.
(ii) மனிதவள மேலாண்மை என்பது ஒரு நிறுவனத்தில் ஆட்களை பணியமர்த்தல், ஊக்குவித்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான மேலாண்மை பணியை செய்வதாகும்.

25. தரப்படுத்துதல் என்பது பொருட்களை இயல்பான தரத்தின் அடிப்படையில் பிரித்து அமைப்பது ஆகும். பொருட்கள் தரப்படுத்துவதில் பல காரணிகள் தீர்மானிக்கின்றன. அதாவது பொருளின் அளவு, வண்ணம், சுவை மற்றும் அதன் தோற்றம் போன்றவையாகும்.

26. **கலப்படம் :** கலப்படம் என்பது உணவுப் பொருட்களில் விரும்பத்தகாத பதிலிப் பொருட்களைச் சேர்ப்பதாகும். கலப்படப் பொருட்களை வாங்கிப் பயன்படுத்தும் நுகர்வோருக்கு உடல்ரீதியாகவும், பணரீதியாகவும் கடுமையான இழப்புகள் ஏற்படுகிறது. கலப்படம் நுகர்வோரது உடல்நலத்தை பெரிதும் பாதிப்பதால் அது ஒரு மன்னிக்க முடியாத குற்றமாகும்.

27. (i) 1986ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் மற்றும் அதன் பிரிவு 9ன் படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட மன்றத்தை உருவாக்கி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட நுகர்வோர் நலனைப் பாதுகாக்க முடியும்.
(ii) மாநில அரசு தேவைப்பட்டால் ஒரு மாவட்டத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட மாவட்ட மன்றங்களை உருவாக்க முடியும்.

28. இது ஒருவகை எதிர்கால சரக்கு ஆகும். இது விற்பவர் கைவசம் வந்து சேர்வது எதிர்காலத்தில் நடக்கும் நிகழ்ச்சியைப் பொறுத்தது. உதாரணமாக `A' என்பவர் `B' என்பவரோடு ஒரு குறிப்பிட்ட ஓவியம் `C' யிடமிருந்து கிடைத்தால் விற்பனை செய்கிறேன் என ஒப்பந்தத்தில் ஈடுபட்டால் அந்த ஓவியப் பொருள் வருநிகழ்வுசார் சரக்கு என்று பொருட்படும்.

29. வாக்கெடுப்பு என்ற வார்த்தை லத்தீன் வார்த்தையான “வாக்கம்” என்ற சொல்லிலிருந்து தோன்றியது. ஒரு முன்மொழிவுக்கு ஆதரவாகவோ, அல்லது எதிராகவோ ஒருவர் தனது விருப்பத்தை உரியமுறையில் பதிவு செய்வதை வாக்கெடுப்பு குறிக்கிறது.

30. நான் தொழில் முனைவராக இருந்தால், சொந்த சேமிப்பிலிருந்தோ நண்பர்கள் வட்டாரத்தில் இருந்தோ, உறவுமுறையின் உதவியாலோ, வங்கிகளிடமோ அல்லது நிதி நிறுமங்களிடமிருந்து கடனாகவோ, வினைமுதல் நிறுமங்களிடமிருந்து பங்கு வெளியீட்டின் மூலமோ, கடன் பத்திர வெளியீட்டின் மூலமோ தவணை கடன் மூலமோ வங்கிகளிடம் மாற்று சீட்டுகளை வட்டஞ்செய்தோ குறுகிய கால கடன் பெறுவதன் மூலமோ, பந்தக் கடன் பெறுவது வாயிலாக சொத்துக்கள் அடமானம் செய்வதன் மூலமோ, பத்திரங்கள் அடகு வைப்பதன் மூலமோ மூலதனத்தை திரட்டுவேன்.

## பகுதி - III

31. **திரு.டெய்லர் அவர்களால் முன்வைக்கப்பட்ட அறிவியல் பூர்வ மேலாண்மையின் கோட்பாடுகள்.**
(i) அறிவியல், கட்டை விரலின் விதி அல்ல.
(ii) இணக்கம், சச்சரவின்மை.
(iii) மனப்புரட்சி.
(iv) தனிமனிதத் தத்துவம் அல்ல , ஒத்துழைப்பு.
(v) ஒவ்வொருவருக்கும் அவரவரது திறமைக்கும் செழிப்புக்குமான வளர்ச்சி.

32. (i) **தேவை மற்றும் பயன்பாட்டு இரசீதுகள்:** தேவை இரசீது என்பது பணம் செலுத்துவதற்கான தேதி எதுவும் குறிப்பிடப்படாத இரசீது ஆகும்.
(ii) **தூய்மை இரசீதுகள் மற்றும் ஆவண இரசீதுகள்:** பொருட்களின் உரிமை ஆவணம் மூலம் இணைக்கப்பட்ட இரசீதுகள் ஆவண இரசீதுகள் என்று அழைக்கப்படுகிறது.
(iii) **தனித்துவமான இரசீதுகள் :** தனித்துவமான இரசீதுகள் என்பது வரைதல் மற்றும் ஏற்றுக் கொள்ளல் உள்ளூர் வழக்கப்படி அல்லது வர்த்தகப் பயன்பாட்டின் மூலம் நிர்வகிக்கப்படுவதைக் குறிக்கிறது.

33. **பங்கு மாற்றகங்களின் குறைபாடுகளை பின்வருமாறு கூறலாம்.**
(i) பங்கு பரிவர்த்தனையின் சீரான மற்றும் கட்டுப்பாடு இல்லாதது.
(ii) பங்குச் சந்தைகளின் உறுப்பினர் மீது கட்டுப்பாடு இல்லாதது.
(iii) ஆரோக்கியமற்ற ஊகத்தை கட்டுப்படுத்துவதில் தோல்வி.

34. (i) நிறும பெயரைத் திருத்த
(ii) நிறும பங்கு முதலை மாற்றியமைக்க
(iii) கடனீட்டு பத்திரங்களை மீட்க

35. (i) **தூண்டுபவர் :** சந்தையின் மேம்பாடு கருதி அவ்வப்போது சந்தையிடுகையின் வாய்ப்புகள் மற்றும் சந்தையில் ஏற்படும் மாற்றங்களை உன்னிப்பாக கூர்ந்து கவனித்து அதற்கு ஏற்றவாறு சந்தையிடுகலவையில் மாற்றத்தை ஏற்படுத்தி ஒரு புதிய கோணத்தை சந்தையிடுகையாளர் ஏற்படுத்துகிறார்.
(ii) **புதுமைபுகுத்துநர் :** சந்தையிடுகையாளர் தனது பண்டங்கள் மற்றும் பணிகளை சந்தையில் தனக்கென ஒரு இடத்தை ஏற்படுத்துவதற்கு

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



நடைமுறையில் இருந்து வரும் பொருட்களின் இயல்பை அதிகரித்தல் மதிப்பை கூட்டுதல், விலையில் மாற்றத்தை ஏற்படுத்துதல், பொருள்கொண்டு சேர்க்கும் முறை, தொழில் முறையில் மாற்றம் மற்றும் உற்பத்தி முறையில் மாற்றம் போன்றவற்றை செய்து வருகிறார்.

(iii) **ஒருங்கிணைப்பாளர் :** பண்டங்கள் மற்றும் பணிகள் பற்றி நுகர்வோர் மற்றும் வாடிக்கையாளரின் மத்தியில் கருத்துக்களை பெற்றும் அதன் அடிப்படையில் அமைப்பின் ஒருங்கிணைப்பு பணியினை மேற்கொள்கிறார்.

36. தேசிய குறை தீர்ப்பு ஆணையம் அறிவிப்பின் மூலம் நிறுவப்பட்ட இவ்வமைப்பில்.
   (i) 5 உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர்கள்.
   (ii) அவர்களில் ஒருவர் நீதி துறையை சார்ந்தவராக இருக்க வேண்டும்.
   (iii) ஏனைய நபர்கள் பிறதுறைகளில், அறிவு, ஆற்றல், அனுபவம் பெற்றவராக இருக்க வேண்டும்.
   (iv) இவ்வமைப்பில் பெண் உறுப்பினர் இருக்க வேண்டும்.

37. (i) தாராளமயமாக்கல் என்பது வணிக நடைமுறையில் உள்ள சட்ட திட்டங்களை அல்லது விதிகளை பொருளாதாரத்தில், சந்தை நல்ல நிலையை அடைய அரசாங்கம் கட்டுப்பாடுகளை தளர்த்துவது ஆகும். அரசாங்கத்தின் கொள்கையான வரிவிதிப்பு, ஏற்றுமதி இறக்குமதி தீர்வைகள், மானியங்கள் மற்றும் பிறக்கட்டுப்பாடுகள், நாடுகளுக்கிடையே உள்ள சட்டத்திட்டங்களை தளர்த்தும் நடவடிக்கை ஆகும்.
   (ii) தாராளமயமாக்குதலின் மூலமான புதிய தொழிற்கொள்கை உரிமம் முறை அல்லது "உரிமம் ராஜ்" போன்றவற்றை அகற்றியது தாராளமயமாக்குதலின் படிவங்கள் (அல்லது) அமைப்புகள் தாராளமயமாக்கல் தொடர்பாக அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

38. **மாற்றுமுறை ஆவணத்தின் எடுகோள்கள்:** மாற்றுமுறை ஆவணத்தின் எடுகோள்கள் அல்லது அனுமானங்கள் பின்வருமாறு:
   (i) ஒவ்வொரு மாற்றுமுறை ஆவணமும் மறுபயன் கருதி வரையப்பட்டது.
   (ii) ஒவ்வொரு மாற்றுமுறை ஆவணத்தின் அனுமானமும் ஒப்புக்கொள்வதாகக் கருதப்படுகிறது.
   (iii) அதில் குறிக்கப்பட்டிருக்கும் நாளில் அது எழுதப்பட்டது.

39. **மந்தமான தொழில் முனைவோர் (அ) ஆண் தேனி தொழில் முனைவோர் :** மந்தமான தொழில் முனைவோர்களும் பழமைவாத தொழில் முனைவோருக்கு நிகராக மாறுதல்களை ஏற்க விரும்பாதவர்கள். இவர்கள் யாரும் நுழைய விரும்பாத அல்லது பெரிய நிறுமங்களால் புறக்கணிக்கப்பட்ட ஒரு சிறிய சந்தையில் செயல்படுபவர்கள். அதாவது சிறிய குட்டையில் பெரிய மீனாக அரசாள்பவர்கள். அந்த சிறுசந்தையில் எவ்விதமாற்றமும் செய்யாமல் அப்படியே இயங்குபவர்கள்.

40. **பணியமர்த்தல் முக்கியத்துவம் :** பணியமர்த்தல் முக்கியத்துவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.
   (i) இது ஊழியர் ஒழுங்குணர்வை மேம்படுத்துகிறது.
   (ii) பணியாளர் சுழற்சி குறைப்பதில் இது உதவுகிறது.
   (iii) இது மோதல் விகிதங்கள் அல்லது விரும்பப்படாத நிகழ்வுகளை குறைக்க உதவுகிறது.

## பகுதி - IV

41. **(அ) நவீன மேலாண்மையின் கோட்பாடுகள்:** நவீன மேலாண்மையின் தந்தை எனப் போற்றப்படும் திரு.ஹென்றி போயல் ஒவ்வொரு மேலாளரும் நிறுவனத்தின் வெற்றிக்காக நடைமுறைப்படுத்த வேண்டிய 14 பிரதான கோட்பாடுகளை வரையறுத்திருக்கிறார். அவைகளாவன.

   (i) **வேலைப் பகிர்வு :** இக்கோட்பாட்டின்படி தொழிலமைப்பின் மொத்தப்பணிச் சுமையும் சிறிய பணிகளாகப் பகிர்வு செய்ய வேண்டும். தொழிலாளர் ஒவ்வொரு தொழிலாளியின் திறமைக்கேற்ப பணி ஒதுக்கீடு செய்யப்பட்டு அப்பணியில் அத்தொழிலாளி சிறப்பீடுபாடும் நிபுணத்துவமும் அடையும் வண்ணம் தொழில் முறை வளர்ச்சியையும் பணிச்சூழலையும் உருவாக்க வேண்டும்.

   (ii) **அதிகாரமும், பொறுப்பும்:** அதிகாரம் என்பது ஒரு அலுவலர் தன் கீழ்ப்பணியாளர்களுக்கு ஆணையிடும் உரிமையைக் குறிக்கின்றது.

   (iii) **ஒழுங்குமுறை :** இது கீழ்ப்படிதல், மற்றவர்களிடம் முறைப்படி நடத்துதல், அதிகாரத்தை மதித்தல் போன்றவை ஆகும். இவ்வொழுங்கு நிறுவனம் செம்மையாக நடைபெற இன்றியமையாததாகும்.

   (iv) **பொது நலனுக்காக தனி நலம் புறக்கணிக்கப்படல் வேண்டும்.** நிர்வாகம் தனிப்பட்ட ஆதாயங்களை ஒதுக்கி வைத்துவிட்டு நிறுவனத்தின் நோக்கங்களை மட்டுமே முன் நிறுத்த வேண்டும். எனவே தனிப்பட்ட நபர்களின் தனிநலனை விட தொழில் நிறுவனத்தின் நோக்கமே அனைத்தையும் விட மேம்பட்டிருக்க வேண்டும்.

   (v) **ஊதியம் :** ஊதியம் என்பது பணியாளர்களின் பணிக்கு கொடுக்கப்படும் விலையாகும். பணியாளருக்கு கொடுக்கப்படும் ஊதியமே தொழிலாளர்களை ஊக்குவிக்கும் முதன்மையான ஊக்குவிப்பவனாக இருந்து உற்பத்தியை அதிகரிப்பதால் அவர்களுக்கு போதுமான ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

**(அல்லது)**

**(ஆ)** பொருட்களில் உள்ள குறைபாடுகள் தெளிவாக குறிப்பிட்டு பாதிக்கப்பட்ட நுகர்வோர் தனது புகார் மனுவை தயாரிப்பாளர் அல்லது விற்பனையாளர் அல்லது பொருளை விற்ற வணிகர்கள் இடம் தாக்கல் செய்யலாம். பாதிக்கப்பட்ட நுகர்வோர் வணிகர்களின் நியாயத்திற்கு புறம்பான விற்பனை நடவடிக்கைகளுக்கு எதிராகவோ அல்லது அவர்கள் ஈடுபட்ட தடை செய்யப்பட்ட வணிக நடவடிக்கைகளுக்கு எதிராகவோ புகார் அளிக்கலாம்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



(i) நுகர்வோர் தனது பெயர், முகவரி, பொருள் வாங்கிய நாள், வாங்கிய பொருள் விவரம் குறித்து சட்டப்படி கொடுக்கப்பட வேண்டும். அறிவிப்பில் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

(ii) வாங்கிய பொருளில் உள்ள தரக்குறைப்பாடுகள் அல்லது அதிலிருந்து எழுந்த சிக்கல்களை தெளிவாக குறிப்பிட வேண்டும்.

(iii) புகாரின் பேரில் சம்மந்தப்பட்ட உற்பத்தி அல்லது விற்பனை நிறுவனம் இந்நாள்வரை எடுத்த தீர்வு நடவடிக்கைகளை விவரிக்க வேண்டும்.

(iv) சம்மந்தப்பட்ட நிறுவனத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் தீர்வு நடவடிக்கை.

(v) சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு குறைகளை தீர்க்க அளிக்கப்பட்ட கால அவகாசம்.

42. **(அ) நன்மைகள் :**

**(i) அந்நியசெலாவணி இருப்பு அதிகரிப்பு:** வெளி நாட்டு முதலீட்டிற்கு அந்நிய செலவாணிக்குமான கட்டுப்பாடுகளை தளர்த்தி மூலதனத்தை எளிதில் பெறுவதற்கு வழிவகை செய்துள்ளது.

**(ii) நுகர்வு அதிகரிப்பு :** தாராளமயமாக்களினால் ஒரு நாட்டில் பயன்பாட்டிற்கு அதிக அளவிலான பொருட்களை கிடைக்கவும் அதிக உற்பத்திக்கும் வழிவகை செய்கிறது.

**(iii) விலை கட்டுப்பாடு :** ஏற்றுமதி இறக்குமதி தீர்வைகளை நீக்குவதால் நுகர்வோருக்கு குறைந்த விலைக்கு பொருட்கள் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தாராளமயமாக்கலினால் இறக்குமதி நாடுகளுக்கு நன்மை விளைவிக்கிறது.

**(iv) வெளிநாட்டில் பெறும் கடன்களை குறைக்கிறது:** வெளிநாட்டுக் கடன்களை ஈர்ப்பதன் மூலம் வெளிநாட்டு வர்த்தகக் கடன்களை வாங்கும் வாய்ப்பை குறைக்கிறது.

**(v) வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிப்பு :** ஒரு நாடு வணிகத்தை தாராளமயமாக்குதலின் மூலமாக அதிக அளவில் வெளிநாடுகளிலிருந்து கவர்ச்சிகரமான முதலீடுகளை பெறமுடிகின்றது. அம்முதலீடுகள் மூலமாக உள்நாட்டில் மூலதனத்தை பெருக்குவதோடு அதன் பொருளாதாரத்தை பன்மடங்கு பெருக்குவதற்கு உதவுகிறது.

**குறைபாடுகள் :**

**(i) வேலையின்மையை அதிகரித்தல் :** வர்த்தக தாராளமயமாக்கல் பெரும்பாலும் பொருளாதாரத்தின் சமநிலைக்கு வழிவகுப்பதால் சிறு தொழில்களில் சில வளர்ந்தும் சில சிறு தொழில்களில் சரிவும் ஏற்படுகிறது இதனால் சில தொழிற்சாலைகள் மூடுகின்ற நிலையால் வேலையில்லா நிலை உருவாகிறது.

**(ii) உள்நாட்டு தொழில் அலகுகளின் இழப்பு:** தாராளமயமாக்கல் கோட்பாட்டில் குறைந்த நுழைவுக் கட்டுப்பாடுகளுடன் வெளிநாட்டு தொழில்கள் பல நாடுகளில் ஊடுருவ சாத்தியம் அதிகம் உள்ளது. இது உள்நாட்டு தொழில்களுக்கு அச்சுறுத்துவதுடன் மற்றும் போட்டியை தோற்றுவித்து உள்நாட்டு தொழில் அடியோடு ஒழிக்கும் சதியாகவும் கருதப்படுகிறது.

**(iii) அயல் நாடுகளை சார்ந்திருத்தலை பெருக்கும்:** வர்த்தக தாராளமயமாக்கல் என்பது பலம் பொருந்திய பன்னாட்டு நிறுவனங்களிலிருந்து அதிக போட்டிகளை எதிர்கொள்ளும் அது சந்தையை தன் கட்டுபாட்டிற்கு கீழ் கொண்டுவரும் நிலையை உருவாக்க நேரிடலாம்.

**(அல்லது)**

**(ஆ) பணச்சந்தையின் சிறப்பியல்புகள் :**

**(i) குறுகிய கால நிதிகள்:** குறுகிய கால நிதிகள் அல்லது பணத்திற்கு நிகரான நிதி சொத்துக்களுக்கான முற்றிலுமான ஒரு சந்தை இதுவாகும்.

**(ii) முதிர்வு காலம்:** இச்சந்தையில் ஒரு வருடத்திற்கு குறைவான முதிர்வு காலம் கொண்ட நிதி சொத்துக்களை மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

**(iii) பணமாக மாற்றுவது:** உடனடியாக பணமாக மாற்றியமைக்கக் கூடிய நிதிச் சொத்துக்களை மட்டுமே இச்சந்தையில் இழப்பு இல்லாமல் குறைந்தபட்ச பரிவர்த்தனை செலவில் பரிமாற்றம் செய்யப்படுகிறது.

**(iv) முறையான இடமில்லை :** பொதுவாக பரிவர்த்தனைகள் தொலைபேசி அதாவது வாய்மொழி தொடர்பு மூலமாக நடைபெறுகின்றன. சம்பந்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் எழுதப்பட்ட தகவல்தொடர்புகள் பின்னர் பரிமாறிக்கொள்ளலாம்.

**(v) துணை சந்தைகள் :** இது ஒரு ஒற்றைத் தன்மையுள்ள சந்தை அல்ல. இது தனித்தனி சிறப்புடைய பல துணைச்சந்தைகளின் தொகுப்பாகும். எ.கா: அழைப்பு பணச்சந்தை, ஏற்புச்சந்தை மற்றும் மாற்றுமுறை ஆவண சந்தைகள்.

43. **(அ)** மனித வளங்களின் தனிப்பட்ட, குறிப்பிடத்தக்க மற்றும் வித்தியாசமான அம்சங்கள் பின்வருமாறு:

(i) உற்பத்தி செய்யும் ஒரே காரணியாக மனித வளம் திகழ்கிறது.

(ii) பிற அனைத்து வளங்களையும் மனித வளம் உருவாக்குகிறது.

(iii) பணியமர்த்தப்பட்ட பணியாளர்களை கொண்டதே தவிர மனித வளம் என்பது பணியாளர் அல்ல.

(iv) மனித வளமானது கண்டுபிடிப்பு மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது.

(v) மனித வளங்கள் தனியாக சிந்திக்கவும், செயல்படவும், பகுப்பாய்வு செய்யவும், மற்றும் விளக்கவும் முடியும்.

**(அல்லது)**

**(ஆ)** 2013 ஆம் ஆண்டின் நிறுவன சட்டத்தின் பிரிவு 2 (51) இல் முக்கிய மேலாண்மையில் நிறுமத்தின் முக்கிய அதிகாரம் உள்ள நபர்கள் என்பதற்கான வரையறை உள்ளது. பின்வரும் நிறுமங்கள் முக்கிய அதிகாரம் உள்ள நபர்களை நியமிக்க வேண்டும்.

(i) முதன்மை பிரதான நிர்வாக அதிகாரி

(ii) நிர்வாக இயக்குநர் அல்லது மேலாளர்;

(iii) நிறுமத்தின் செயலாளர்;

(iv) முழு நேர இயக்குநர்;

(v) முதன்மை பிரதான நிதி அலுவலர்; மற்றும்

(vi) அத்தகைய மற்ற அலுவலர்கள் பரிந்துரைக்கப்படலாம்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



44. **(அ)** சந்தையிடுகையின் பரிணாம வளர்ச்சியின் நிலைகள்:

(i) **பண்டமாற்று முறை:** பண்டங்களுக்கு இணையாக பண்டங்களை மட்டுமே மாற்றிக் கொண்டார்கள், குறிப்பாக, பணம். இதில் இடம்பெறவில்லை.

(ii) **உற்பத்தி சார்ந்து:** நுகர்வோரின் விருப்பங்களுக்கு மாறாக லாப நோக்கத்தோடு அதிக அளவில் உற்பத்திக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. மேலும் வாடிக்கையாளர்களுக்கு சிறிய அளவிலான முக்கியத்துவமே இக்காலக்கட்டத்தில் வழங்கப்பட்டது.

(iii) **விற்பனை சார்ந்து :** இன்றைய பொருளாதார நிலை வாழ்க்கையின் மாற்றத்திற்கு ஒரு முன் உதாரணமாக திகழ்கிறது. விற்பனையே ஒரு முற்போக்கு காரணியாக கருதப்படுகிறது.

(iv) **சந்தையிடுகை சார்ந்து :** வாடிக்கையாளர்களின் முக்கியத்துவம் உணரப்பட்டது ஆனால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்று தீர்ப்பதில் மட்டுமே, அதிக போட்டி இருந்து வந்துள்ளது. மேலும், தனியாள் விற்பனை மற்றும் அதிக அளவினை விற்பனை மேம்பாடு, போன்றவற்றை விற்பனை ஊக்கிகளாக பயன்படுத்தப்படுகிறது.

(v) **நுகர்வோர் சார்ந்து:** இந்த நிலையில் மட்டுமே மேம்படுத்தப்பட்ட பொருட்கள் சந்தைக்கு கொண்டு வரப்பட்டது. மேலும் அவைகள் நுகர்வோருக்கு மனநிறைவு ஏற்படுத்தும் வகையில் சுவை, விருப்பங்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

**(அல்லது)**

**(ஆ) செல்தகு மேலெழுத்தின் இயல்புகள் :** ஆவணத்தின் முகப்பில் மேலெழுத வேண்டும். மையில் எழுதுவதே நல்லது;

(i) பென்சிலால் அதை அழித்துத் திருத்த ஏதுவாகும். இதனால் மோசடி ஏதும் நடைபெறலாம்.

(ii) மேலெழுதுபவர் தாம் இயல்பாக கையொப்பம் இடுவது போன்றே மேலெழுத வேண்டும்.

(iii) மேலெழுத்தில் பெயர் எழுதப்பட்டபடியேதான் கையொப்பமும் இருக்க வேண்டும். பெயர் தவறாக எழுதியிருப்பின், கையெழுத்தும் அத்தவறான எழுத்துக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

(iv) ஆவணத்தின் முழுமதிப்பிற்கும் மேலெழுதப்படல் வேண்டும். மதிப்பின் ஒரு பகுதிக்கு மேலெழுத்து செய்யப்பட்டிருப்பின் அது செல்லாது.

(v) எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் தமது இடக்கை பெருவிரல் குறி இட்டால் போதுமானது. அவர் இட்ட பெருவிரல் குறியை ஒருவர் சான்று கூறல்வேண்டும்.

45. **(அ) நிதிச் சந்தைகளை பல்வேறு வழிகளில் பிரிக்கலாம். அவை :**

**(அ) நிதிக் கோருதல் வகையின் அடிப்படையில் :**

(i) **கடன் சந்தை :** கடன் கருவிகளை வர்த்தகம் செய்வதற்கான நிதிச் சந்தை கடன் சந்தை ஆகும். அரசு பத்திரங்கள் அல்லது பிணையங்கள், நிறும கடனீட்டு பத்திரங்கள் போன்றன.

(ii) **நேர்மை பங்குச் சந்தை :** நிறும நேர்மை பங்குகளின் வணிகத்திற்கான நிதிச் சந்தை நேர்மை பங்குச் சந்தை ஆகும்.

**(ஆ) நிதி கோருதல் முதிர்வு அடிப்படையில் :**

(i) **பணச் சந்தை :** குறுகிய கால, (ஓராண்டு அல்லது அதற்கு குறைவாக) நிதி கோருதலுக்கான நிதிச் சந்தை பணச்சந்தை ஆகும். எ.கா. கருவூலச் சீட்டுகள், வணிகத் தாட்கள், வைப்புச் சான்றிதழ்கள் ஆகியன.

(ii) **மூலதனச் சந்தை :** நீண்ட கால (ஓராண்டுக்கு மேல்) நிதிகோருதலுக்கான சந்தை மூலதன சந்தை ஆகும். எ.கா. பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள் போன்றவை.

**(இ) நிதி கோருதலின் வெளியீட்டுக் கால அடிப்படையில் :**

(i) **முதல் நிலைச் சந்தை :** முதன்முதலில் புதியதாக பத்திரங்களை வெளியிடும் சந்தை முதல் நிலைச் சந்தை எனப்படுகிறது. இதில் பணம் முதலீட்டாளர்களிடமிருந்து நேரடியாக நிறுமங்களுக்குச் செல்கிறது.

(ii) **இரண்டாம் நிலைச் சந்தை :** ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை இரண்டாம் நிலைச் சந்தை ஆகும்.

**(ஈ) நிதி கோருதலின் வழங்கலின் கால அடிப்படையில் :**

(i) **ரொக்கம் (அ) உடனடிச் சந்தை:** ஆவணங்களை வழங்கலும் ரொக்கம் பெறுதலும் உடனடியாக நடைபெறும் சந்தை உடனடிச் சந்தை ஆகும்.

(ii) **முன்னோக்கிய (அ) எதிர்காலச் சந்தை:** சொத்து வழங்கலும் ரொக்கம் செலுத்தலும் முன்னரே தீர்மானிக்கப்பட்டு எதிர்காலத்தில் நடைபெறும் சந்தை எதிர்கால சந்தை ஆகும்.

**(உ) நிதிச் சந்தை அமைப்பின் அடிப்படையில்:**

(i) **பரிமாற்றக வர்த்தகச் சந்தை :** ஒரே மாதிரியான ஒழுங்கு நடைமுறைகளை கொண்ட பங்கு மாற்றகம் பரிமாற்றக வர்த்தக சந்தை எனப்படுகிறது. இது ஒரு மையப்படுத்தப்பட்ட அமைப்பு.

(ii) **எதிர்ச் சந்தை :** வழக்கமான நடைமுறைகளைக் கொண்டு பங்கு மாற்றகத்தில் வெளியில் நடைபெறும் சந்தை எதிர்ச் சந்தை எனப்படுகிறது. இது ஒரு மையப்படுத்தப்படாத அமைப்பு.

**(அல்லது)**

**(ஆ)** I. **திறன் சோதனை :** இச்சோதனை விண்ணப்பதாரரின் பொது அறிவுத்திறன், பிரச்சனைகளை தீர்க்கும் திறன், குறிப்பிட்ட துறையில் அவருக்குள்ள அறிவு, பகுத்தறிவும் திறன், நுண்ணறிவு போன்ற திறன்களை சோதிக்க பயன்படுகிறது. இச்சோதனை குறிப்பிட்ட பணிக்கு ஏற்ற பொருத்தமான நபரை தேர்ந்தெடுக்கப்பயன்படுகிறது.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



(i) **உளவியல் தேர்வு :** மனோபாவர் சோதனை என்பது குறிப்பிட்ட பணிக்கு விண்ணப்பதாரர் எந்த அளவிற்கு பொருத்தமானவர் என்பதை அளவிட உதவுகிறது. இச்சோதனை பணியாளரின் பன்முகத் திறன்களை அளவிடவும் பணியாளரின் எதிர்கால செயல்திறனை முன்கணிக்கவும் பயன்படுகிறது.

(ii) **சாதனை ஆய்வுத் தேர்வு :** இது குறிப்பிட்ட துறையில் விண்ணப்பதாரரின் அடைவுத் திறனை அளவிடும் சோதனையாகும். கல்வி நிறுவனங்களில் வழக்கமாக நடத்தப்படும் தேர்வுகள் இச்சோதனை முறையைச் சார்ந்ததே. இதனை அறிவுத் திறன் சோதனை எனவும் அழைக்கலாம்.

(iii) **நுண்ணறிவுத் திறன் தேர்வு :** நுண்ணறிவுத் திறன் சோதனை என்பது ஒருவகை உளவியல் ரீதியிலான சோதனை ஆகும். இது மூளையின் சிந்திக்கும் ஆற்றல், மனத்திறன் நுண்ணறிவு (IQ) போன்றவற்றை சோதிக்க பயன்படும். நுண்ணறிவு எண் என் அளவீட்டால் இது அளவிடப்படுகிறது.

(iv) **முடிவெடுக்கும் திறன் ஆய்வுத் தேர்வு:** இச்சோதனை விண்ணப்பதாரரின் சூழ்நிலைக்கேற்ப முடிவெடுக்கும் திறன் மற்றும் காரணப்படுத்தும் திறன் போன்றவற்றை சோதிக்க பயன்படுகிறது.

II. **ஆளுமை ஆய்வுத் தேர்வு :** இச்சோதனை விண்ணப்பதாரரின் அறிவுத்திறன் சாராத பிற திறன்களான மனோநிலை, ஆர்வம், உணர்வு ரீதியான பிரதிபலிப்பு, உணர்ச்சிகளை கட்டுப்படுத்தல், உறுதித்தன்மை போன்ற திறன்களை சோதிக்க பயன்படுகிறது. இதில் சரியான விடை, தவறான விடை என்று எதுவுமில்லை. இது கீழ்க்காணும் சோதனைகளை உள்ளடக்கியது.

(i) **ஆர்வ ஆய்வுத் தேர்வு :** இச்சோதனை தேர்ந்தெடுக்கப்பட்டவரின் ஆர்வம் எத்துறையில் மிகுதியாக உள்ளது என்பதை அறிந்து அத்துறையில் அவருக்கு மிகுந்த ஆர்வமுள்ள பணியை அவருக்கு ஒதுக்க பயன்படுத்தப்படுகிறது.

(ii) **ஆளுமைத்திறன் ஆய்வுத் தேர்வு:** மனிதர்களை நிர்வகித்து ஆளும் திறன், அதிகாரம் செலுத்தும் திறன், தன்னம்பிக்கை போன்ற ஆளுமைத் திறன்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவரிடம் எந்த அளவுக்கு உள்ளது என்பதை இச்சோதனை மூலம் கண்டறியப்படுகிறது.

46. **(அ)** (i) **ஸ்டார்ட்அப் இந்தியா:** தொடக்க நிலையில் உள்ள தொழில்கட்கு ஆலோசனை வழங்குவது, வளர்ப்பது, ஆதரவு அளிப்பது போன்ற நடவடிக்கைகள் மூலம் அவற்றை வளர்க்கும் திட்டத்தினை 2016ம் ஆண்டு சனவரியில் துவங்கியது. துவக்கக் காலம் முதலே பல தொழில் முனைவோர்கள் பலதரப்பட்ட தொழில் வினைகளை துவக்கி வெற்றி கண்டனர்.

(ii) **இந்தியாவில் தயாரிப்பு திட்டம் :**

- இத்திட்டத்தின் மூலம் இந்தியாவை பன்னாட்டு உற்பத்தி மையமாக மாற்ற உதவி செய்யப்படுகிறது.
- தற்பொழுது இதன் விளைவாக அன்னிய முதலீடு, புதுமை புகுத்தல், திறன் வளர்ச்சி, அறிவுசார் சொத்து பாதுகாப்பு, உற்பத்தி, கட்டமைப்பு மேம்பாடு போன்ற வளர்ச்சிசார் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டு முழுவீச்சில் செயல்பட்டு வருகிறது.

(iii) **அடல் புதுமை புகுத்தல் திட்டம்:** பன்னாட்டு தரத்திற்கு இணக்கமான முறையில் புதுமையான பொருட்களை வடிவமைப்பது மற்றும் தொழில் முனைவை முழுவீச்சில் ஊக்குவித்து அதை வளர்ப்பது என்ற முதன்மையான நோக்குடன் அடல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(iv) **பெண்களுக்கு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டத்திற்கான ஆதரவு:** தொழில்முறை மற்றும் ஆற்றல் மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் திட்ட குழுவும் இணைந்து இதுவரையில் இதுக்குறித்து நடைமுறையில் இருந்த 30 ஆண்டுகால வழிகாட்டல் நெறிமுறைகளை தற்கால தேவைக்கு ஏற்ப மாற்றி அமைத்தும் இத்திட்டத்தின் மூலம் வேளாண்துறை, பழ வேளாண்மை, உணவு பதப்படுத்துதல், சுற்றுலா, பாரம்பரிய கைவினைக் கலைகள், விருந்தோம்பல், கணினி மற்றும் தகவல் தொடர்பு துறை போன்ற துறைகளில் துவங்கப்படும் மகளிர் தொழில்முனைவோருக்கு பயிற்சி நல்கப்படுகிறது.

(v) **ஜன்தன் - ஆதார் - மொபைல் :** இத்திட்டத்தின் மூலம் பல அரசுத் திட்டங்களில் பயன் பெற்று வரும் பயனாளிகளுக்கு சேரவேண்டிய மானியத்தை சம்பந்தப்பட்ட துறை நேராக அவர்களுக்கு வழங்கும் நோக்கத்தில் பயனாளிகளை கட்டாயமாக வங்கிகளில் கணக்கு ஆரம்பிக்க கட்டாயப்பப்படுத்தப்பட்டு அனைவர் பெயரிலும் வங்கிக்கணக்கு ஆரம்பிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டதின் மூலம் பயனாளிகள் மானியத் தொகையைப் பயன்படுத்தி தங்களின் வாழ்வை வளப்படுத்திக் கொள்ள முடிகிறது.

**(அல்லது)**

**(ஆ)** விதிவிலக்கு மேலாண்மை பின்வரும் நன்மைகளை வழங்குகிறது.

(i) இது மேலாளர்களின் நேரத்தை சேமிக்கிறது. ஏனெனில் அவர்கள் விதிவிலக்கான செயல்களை மட்டுமே கையாளுவார்கள். வழக்கமான பிரச்சினைகள், கீழ்நிலை ஊழியர்களின் வசம் விடப்படுகின்றன.

(ii) இது முக்கிய பிரச்சினைகளை நிர்வகிப்பதில் கவனங்களைச் செலுத்துகிறது.

(iii) இது அதிகாரப் பகிர்வினை எளிமையாக்குகிறது. மேல் நிர்வாகம் பெருந்திட்ட முடிவுகளில் கவனம் செலுத்துகிறது மற்றும் செயல்திறன் முடிவுகள் கீழ்நிலை நிர்வாகத்திற்கு விடப்படுகின்றன.

(iv) இது முக்கியமல்லாத தகவலில் இருந்து முக்கியமான தகவலைப் பிரிக்கும் ஒரு தொழில் நுட்பமாகும்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



(v) முக்கியமான சிக்கல்களைக் கண்டறிவதன் மூலம் வாய்ப்புகளையும் அச்சுறுத்தல்களையும் மேலாண்மை எச்சரிக்கையாக வைத்திருக்க விதிவிலக்கு மேலாண்மை உதவுகிறது.

47. **(அ) (i) தேசிய பங்குச்சந்தை :**

(i) தேசிய பங்குச்சந்தை நவம்பர், 1992 இல் அமைக்கப்பட்டது. தேசிய அளவில் திரை சார்ந்து இணைய வழியாக ஆணை பெறும் வியாபார அமைப்பாகும்.

(ii) இந்த அமைப்பு செயற்கை கோள் இணைப்பு மூலம் நாடு முழுவதும் பரவியுள்ள உறுப்பினர்களிடையே வியாபாரம் செய்கிறது.

(iii) தேசிய பங்குச்சந்தை இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. அதாவது கடன் பிரிவு மற்றும் மூலதன பிரிவு. அது வெளிப்படையான, திரை சார்ந்த அடிப்படையிலான மற்றும் பயனர் நட்புக்கு உலகளாவிய தரநிலைகளின் வர்த்தகம் செய்ய இயலுகிறது.

**(ii) தேசிய பத்திர வைப்பகங்கள் வரையறுக்கப்பட்டது:** இந்தியாவில் 1996ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வைப்புச்சட்டத்தை இயற்றி இந்த அமைப்பை தோற்றுவித்தது. நவீன காலத்திற்கேற்றவாறு காகிதமில்லாமல் பத்திரங்கள் தீர்வை செய்வதன் மூலம் புதிய சகாப்தத்தை தோற்றுவித்துள்ளது. 1996ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் நாள் இந்தியாவில் தேசிய பத்திர வைப்பகங்கள் அமைப்பு தொடங்கப்பட்டது. 1996ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் நாள் காகிதமில்லா பத்திரங்கள் விற்பனையை தேசிய பங்கு பரிமாற்றகம் தொடங்கியது. 1997ஆம் ஆண்டு டிசம்பர் 29ஆம் நாள் முதல் காகிதமில்லா பங்கு பரிவர்த்தனையை பம்பாய் பங்குச் சந்தை தொடங்கியது.

**(அல்லது)**

**(ஆ) தொழில் முனைவின் முக்கியத்துவம் :** தொழில் முனைவு ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெறும் பங்கு வகிக்கின்றது. கீழ்குறிப்பிடப்பட்டுள்ள காரணிகள் தொழில் முனைவின் அவசியத்தை உணர்த்துகின்றன.

**(i) புதுமை படைத்தல் :** தொழில் முனைவும் புதுமை புகுத்துதல் ஆகிய இரண்டும் மிகவும் நெருக்கமான ஒன்றாகும் தொழில் முனைவு இல்லையேல் புதுமைக்கு வழி இல்லை. புதுமை புகுத்துவதன் மூலம் தொழில் முனைவோர்கள் நாட்டின் மேம்பாட்டிற்கு பெரும் பங்கு வகுக்கின்றனர்.

**(ii) நாட்டின் மொத்த பொருள் உற்பத்திக்கு பங்களித்தல்:** தொழில் முனைவு நாட்டின் ஒட்டுமொத்த பொருள் உற்பத்திக்கும் மற்றும் நாட்டின் மொத்த வருமானத்தை அதிகரிப்பதற்கும் அதிக பங்கு வகிக்கிறது. வளர்ந்த நாடுகளான அமெரிக்க, ஜப்பான் மற்றும் ஜெர்மனி, போன்ற நாடுகள் தொழில் முனைவு மேம்பாட்டால் அந்நாட்டின் ஒட்டுமொத்த பொருள் உற்பத்தியிலும், தனிநபர் வருமான முன்னேற்றத்திற்கும் மற்றும் நாட்டின் தேசிய வருவாயை அதிகரிப்பதிலும் வெற்றி கண்டுள்ளன.

**(iii) சீரான வட்டார வளர்ச்சி :** அரசு பல்வேறு சலுகைகள், வரிவிலக்குகள் மற்றும் மானியங்கள் அளிப்பதன் மூலம் நாட்டின் தொழில் ரீதியாக பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சி அடைந்து வருகின்றது. மேற்கண்ட சலுகைகளின் மூலம் பலர் பின்தங்கிய பகுதிகளில் தொழில் முனைவு செயலை மேற்கொள்கின்றனர். இதனால் தொழில் வளர்ச்சி ஏற்பட்டு, புவியியல் ரீதியான ஏற்ற இறக்கங்கள் சரி செய்யப்படுகின்றன.

**(iv) ஏற்றுமதி முன்னேற்றம் :** நாட்டின் ஏற்றுமதி வளர்ச்சிக்கு தொழில் முனைவு ஒரு கருவியாக விளங்குகிறது. ஏற்றுமதி வாய்ப்பு உள்ள பொருட்களை தயாரிக்க முன்வரும் தொழில் முனைவோர்க்கு சிறப்பு வசதிகள், சலுகைகள் மானியங்கள், வரிவிலக்குகள் போன்ற சலுகைகள் தருவன் மூலமாக ஏற்றுமதி வாய்ப்புள்ள பொருட்களை உள்நாட்டில் தயாரிக்க வழிவகை உள்ளன.

**(v) உள்ளார்ந்த வளப்பயன்பாடு :** நாடு முழுவதும் தொழில் முனைவை அதிகரிப்பதின் மூலம் நாடு முழுவதும் பயன்படுத்தப்படாமல் உள்ள வளங்கள் பயன்பாட்டுக்கு உள்ளாகின்றன. நாடு முழுவதும் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்களை பரவலாக உருவாக்குவதன் மூலம் பலத்தரப்பட்ட வளங்கள், இயல் மற்றும் மனித வளங்களை முழுமையாக உற்பத்தியில் ஈடுபடுத்த முடிகிறது.

❁❁❁❁❁

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com